ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1784/8 - 2012 නොවැම්බර් මස 12 වැනි සඳුදා - 2012.11.12
*1784/8 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் தமண பிரதேச சபையின் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

*கிழக்கு மாகாணத்தின் மாகாண சபைக்குத் தெரிவானதன் காரணமாக தமண பிரதேச சபையின் தவிசாளரின் பதவி, வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;*

*தமண பிரதேச சபையின் தவிசாளர் டபிள்யு. டீ. வீரசிங்க எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியை சேர்ந்தவராக இருக்கின்றாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் அத்தகைய கட்சியைச் சேர்ந்தவரும் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டியவருமான தமண பிரதேச சபையின் உறுப்பினரைத் தீர்மானிக்குமாறு மேற்படி கட்டளைச் சட்டத்தின் 65 அ(1) ஆம் பிரிவின் கீழ் என்னால் தேவைப்படுத்தப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே சொல்லப்பட்டதான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்காக மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவருவராக திரு. ஜாகொட ஆரச்சிகே மங்கள மஹிந்த குணவர்த்தன என்பவரை பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;*

*இப்போது தமண பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சிவசுப்பிரமணியம் அச்சுதன் ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. ஜாகொட ஆரச்சிகே மங்கள மஹிந்த குணவர்த்தன என்பவர், தமண பிரதேச சபையின் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*எஸ். அச்சுதன்,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*தமண பிரதேச சபை.*

*தேர்தல்கள் அலுவலகம்,*
*அம்பாறை,*
*2012, நவெம்பர் 02.*

*11 - 996/1*

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் தமண பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

*கிழக்கு மாகாணத்தின் மாகாண சபைக்கு தெரிவானதன் காரணமாக தமண பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;*

*டபிள்யூ. டீ. வீரசிங்க என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் நியமிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும், தமண பிரதேச சபையின் உறுப்பினரொருவராக நியமிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே சொல்லப்பட்டதான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. டீ. எம். சிசில் விஜேரத்ன என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும் ;*

*இப்போது தமண பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சிவசுப்பிரமணியம் அச்சுதன் ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. டீ. எம். சிசில் விஜேரத்ன என்பவர் தமண பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*எஸ். அச்சுதன்,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*தமண பிரதேச சபை.*

*தேர்தல்கள் அலுவலகம்,*
*அம்பாறை,*
*2012, நவெம்பர் 02.*
*11 - 996/2*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*